# பிக்ஹ்க் கலை

M.M. Ramzan (Naleemi, BA, PGDE, M.Ed)

Teachar Al-Azhar College

Hemmathagama

# பிக்ஹுக் காலை

- இஸ்லாமிய கலைகளுள் ஆரம்பத்தில் தோற்றம்பெற்ற கலை
- பிக்ஹ்: விளக்கம்: ஷரீஅத்தில் அல்குர்ஆன், ஸுன்னா, இஜ்திஹாதின் அடிப்படையில் பெறப்பட்ட சட்டங்கள்
- இது தாபிஈன்கள் காலத்தில் தோற்றம்பெற்று வளர்ந்தது
- இதற்காக தனியான வகுப்புக்கள் நடைபெற்றன.
- தாபிஉத் தாபியீன்கள் காலம் இக்கலையின் பொற்காலமாக கருதப்படுகின்றது.
- இக்காலத்தில் கூறப்பட்ட தீர்ப்புக்கள் தொகுக்கப்பட்டு நூலுருப்படுத்தப்பட்டது.

# மத்ஹப்

- மத்ஹப்கள் இதன் அடிப்படையிலேயே தோற்றம்பெற்றன
- இவற்றுள் 4 மத்ஹப்கள் பிரபல்லியமானவை
- இமாம் அபூ ஹனீபா: ஹனபி மத்ஹப்
- இமாம் மாலிக்: மாலிகி மத்ஹப்
- இமாம் ஷாபிஈ : ஷாபிஈ மத்ஹப்
- இமாம் அஹ்மத் பின் ஹன்பல்: ஹன்பலி மத்ஹப்

# இமாம் அபூ ஹனீபா

- இயற்பெயர் நுஃமான் இப்னு ஸாபித்
- கூபாவில் பிறந்தார்.
- இமாமுல் அஃழம் என்ற சிறப்புப்பெயர் பெற்றவர்
- ஒரு வியாபாரியாக இருந்தபோதும் மார்க்க கலைகளில் ஈடுபாடுகாட்டி அதன் மிகப்பெரிய அறிஞராக மாறினார்
- ஹம்மாத் பின் அபீசுலைம் அவர்களின் வகுப்பில் சேர்ந்து தேவுச்சி பெற்றார்
- ஹஜ் பயணங்களின் போது மக்கா, மதீனாவில் வாழ்ந்த அறிஞஉகளிடமும் கற்றுக்கொண்டார்.
- ஹம்மாதின் வபாத்துக்குப் பின்னர் இவர் பாடப்போதனா நடாத்த துவங்கினார்.

# இமாம் அபூ ஹனீபா

- சட்டப் பிரச்சினைகள் தோன்றிய போது, தாமாகவும், சில சந்தர்ப்பங்களில் சமகால அறிஞர்களுடன் இணைந்தும் அவற்றுக்கான தீர்வுகளை முன்வைத்தார்கள்.
- அவை பிற்காலத்தில் பிக்ஹுல் அக்பர் என்ற பெயரில் நூலாக வெளியாகியது
- தாம் சரியென இனங்கண்ட ஹதீஸ்களை ஆதாரமாகக் கொண்டு இஜ்திஹாத் மூலம் தீர்ப்புக்களை வழங்கினார்.
- இது மத்ரஸதுர் ரஃயின் காலம் என வர்ணிக்கப்பட்டது.
- இவரது மாணவர்கள்: இமாம் அபூயூசுப், ஸுபர், ஹஸன் ஷைபானி

# இமாம் அபூ ஹனீபா

- இது பிற்காலத்தில் ஹனபி மத்ஹப் என வழங்கப்பட்டது.
- இமாம்அபூயூசுப், கலீபா ஹாரூனின் காலத்தில் பிரதம நீதியரசராகப் பணியாற்றியதால், ஹனபி மத்ஹப் அரச மத்ஹபாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

# இமாம் மாலிக் (ரஹ்) ஹி93-179

- இயற் பெயர் மாலிக் இப்னு அனஸ்
- மதீனாவில் பிறந்தார்.
- இமாமுல் மதீனா என்ற சிறப்புப் பெயர் பெற்றார்.
- தாபிஈ அறிஞர்களிடம் ஹதீஸையும் பிக்ஹையும் கற்றுக் கொண்டார்.
- மதீனாவில் பாடபோதனைகளை நடாத்திவந்தார்.

# இமாம் மாலிக் (ரஹ்) ஹி93-179

- அவ்வப்போது ஏற்படும் புதிய பிரச்சினைகளுக்கு அல் குர்ஆன், ஸுன்னாவின் அடிப்படையில் தீர்வுகளை முன்வைத்தார்.
- இவரது பிக்ஹ் மத்ரஸதுல் அஸ்ர் என அழைக்கப்பட்டது
- இவரது பிரபல்லியமான நூல் முவத்தா
- இவது மாணவன் யஹ்யாஅந்தலூஸி என்பவரால் ஸ்பானியாவில் மாலிகி மத்ஹப் அறிமுகமாகியது
- கலீபா இரண்டாம் ஹகமின் காலத்தில் அங்கு அரச மத்ஹபாக விளங்கியது.
- வட, மேற்கு ஆபிரிக்கா நாடுகளில் இது பிரபள்ளியமடைந்தது

# இமாம் ஷாபிஈ (ரஹ்) ஹி 150-204

- இயற்பெயர்: முஹம்மத் இப்னு இத்ரீஸ்
- பலஸ்தீன் காஸாவில் பிறந்தார்.
- குறைஷி வம்சத்தை சேர்ந்தவர்
- ஆலிமுல் குறைஷ் சிறப்புப் பெயர்
- மக்கா, மதீனா, பக்தாதில் பாடப்போதனை நடாத்தினார்.
- ஸுன்னா, பிக்ஹ், அரபு இலக்கியம், மருத்துவத்தில் தேர்ச்சிபெற்றிருந்தார்.
- இவரது சில நூல்கள் முஸ்னத் இமாம் ஷாபிஈ, கிதாப் அல் உம்மு, அர்ரிஸாலதுல் உஸூலிய்யா

# இமாம் ஷாபிஈ (ரஹ்) ஹி 150-204

- இவரது சிந்தனைப் போக்கு: மத்ரஸதுல் அஸ்ர் , மத்ரஸதுர் ரஃயி எனப்பட்டது.
- இவர் பக்தாதில் வாழ்ந்தபோது வழங்கிய தீர்ப்புக்கள் கதீம் (பழையவை) எனவும் எகிப்தில் வழங்கிய தீர்ப்புகள் ஜதீத் (புதியவை) எனவும் வழங்கப்படுகின்றன.
- இவரது மத்ஹப், சுல்தான் ஸலாஹுத்தீனின் காலத்தில் எகிப்தில் அரச மத்ஹபாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.
- இலங்கை, இந்தோனேசியா, மலேசியா, எகிப்து, போன்ற நாடுகளில் ஷாபிஈ மத்ஹப் பின்பற்றுகின்றனது

# இமாம் ஹன்பலி (ரஹ்) ஹி 164-241

- இயற்பெயர்: அஹ்மத் பின் முஹம்மத் ஹன்பல்
- இமாம் ஷாபிஈ, இமாம் அபூ யுசபின் மாணவன்
- ஹதீஸ் பிக்ஹ் துறையில் பங்காற்றினார்.
- பிரபல்லியமான நூல்: முஸ்னத் அஹ்மத்
- சிந்தனைப்போக்கு: மத்ரஸதுர் அஸ்ர்
- அப்பாஸியக் கலீபா முதவக்கிலின் காலத்தில் இம் மத்ஹப் அரச மத்ஹபாக பிரகடனப்படுத்தப்பட்டது.
- சவுதி அரேபியாவில் அரச அங்கீகாரம் பெற்ற மத்ஹபாக விளங்குகிறது.

# மதிப்பீட்டு வினாக்கள்

1. பிக்ஹ் என்றால் என்ன?
2. பிக்ஹ் கலை எப்போது தோற்றம்பெற்றது
3. தபஉத் தாபிஊன்கள் காலம் பிக்ஹ் கலையின் பொற்காலம் என வர்ணிக்கப்படுவது ஏன்?
4. நான்கு மத்ஹப்களையும் அதன் இமாம்களையும் குறிப்பிடுக
5. இமாம் அபூ ஹனீபாவின் காலம் மத்ரஸதர் ரஃயி என அழைக்கப்பட்டது ஏன்?

# மதிப்பீட்டு வினாக்கள்

1. எமது நாட்டில் அதிகமானவர்களால் பின்பற்றப்படும் மத்ஹப் எது?
2. இமாம் மாலிகின் சிந்தனை மத்ரஸதுல் அஸ்ர் என வழங்கப்படுவதற்கு காரணம் யாது?
3. இமாம் ஹன்பலின் பிரபல்லியமான நூல் எது?
4. நான்கு இமாம்களையும் அவர்களது இயற்பியர் வாழ்க்கைக் காலம், சிறப்புப் பெயர் என்பவற்றை அட்டவணைப்படுத்துக
5. மாலிகி மத்தஹப் ஆபிரிக்க நாடுகளில் பிரபல்லியமடைய காரணம் யாது?

# மதிப்பீட்டு வினாக்கள்

1. இமாம்களின் வாழ்க்கைச் சுருக்கத்தை பின்வரும் அமைப்பில் தொகுத்து முன்வைக்கு

| பெயர் | இயற்பெயர் | சிறப்புப் பெயர் | பிறப்பு | இறப்பு | ஆசிரியர்கள் | மாணவர்கள் | நூல்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |